இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 29-03-2025

# தேவையற்ற வதந்தியா?

தொகுதி மறுசீரமைப்பு வந்தால் தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்று தேவையற்ற வதந்தியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரப்பி வருவதாகச் சிலர் புலம்பி வருகிறார்கள்.

இப்படி தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்று முதலில் சொன்னவர் முதலமைச்சர் அல்ல.

2023 ஆம் ஆண்டு தெலுங்கானா மாநிலத்தில் பரப்புரை செய்ய வந்த பிரதமர் மோடி அவர்கள், “சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி மக்கள் தொகை அடிப்படையில் சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என காங்கிரசுக் கட்சி சொல்கிறது. அடுத்ததாக தொகுதி மறுவரையறை நடக்க உள்ளது. காங்கிரசுக் கட்சி சொல்வதைப் போல மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால், தென் மாநிலங்கள் 100 தொகுதிகளை இழக்க நேரிடும். தென்னிந்திய மக்கள் இதனை ஏற்பார்களா?” என்று கேட்டார் பிரதமர்.

இதனடிப்படையில் பார்த்தால் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்பதை முதலில் சொன்னவர் பிரதமர் நரேந்திர மோடி தான்!

அரசியல், பொருளாதாரச் செயல்பாட்டாளராக இந்திய அளவில் அறியப்படுபவர் யோகேந்திர யாதவ். டெல்லியில் உள்ள புகழ்பெற்ற தொலைக்காட்சி நிறுவனங்களின் ஆலோசகராக இருந்தார். 2010 ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருந்தார். சமூக ஆய்வு மையத்தின் உறுப்பினர். ஆம் ஆத்மி கட்சியில் தொடக்கத்தில் இருந்தார். இப்போது வழக்கறிஞர் பிரசாந்த் பூஷனுடன் இணைந்து ‘ஸ்வராஜ் அபியான்’ என்ற அமைப்பைநடத்திவருகிறார். அவரதுகட்டுரைகள், இந்தியாமுழுமைக்குமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்.

யோகேந்திர யாதவ், தொகுதி மறுசீரமைப்பு குறித்து எழுதிய கட்டுரை, ‘ஆனந்த விகடன்’ இதழில் (26.3.2025) வெளியாகி உள்ளது. ‘தொகுதி மறுசீரமைப்பு என்கிற பேராபத்து’ என்பதுதான் அதன் தலைப்பு.

“நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை - ஒரு மாநிலத்தில் அதிகமாக்கும் அல்லது குறைக்கும் இந்த நடைமுறையை - நிரந்தரமாக நிறுத்தி வைப்பதே இந்தியா எதிர்கொள்ள இருக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்கும்” என்று அவர் எழுதி இருக்கிறார்.

“உத்தேச மக்கள்தொகை அடிப்படையில் 2026-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தொகுதிகள் எப்படிப் பகிர்ந்து அளிக்கப்பட வாய்ப்புள்ளது என மிலன் வைஷ்ணவ் மற்றும் ஜேமி ஹின்ட்சன் ஆய்வு செய்தனர். இப்போதைய மொத்தத் தொகுதிகளின் எண்ணிக்கையில் இந்த ஆய்வைச் செய்தபோது, தென்னிந்திய மாநிலங்கள்தான் அதிகம் பாதிக்கப்படுபவையாக உள்ளன. தமிழ்நாடு 8 தொகுதிகளையும், கேரளா 8 தொகுதிகளையும், ஆந்திராவும் தெலங்கானாவும் இணைந்து 8 தொகுதிகளையும், கர்நாடகா 2 தொகுதிகளையும் இழக்கும். பெரிய அளவில் இழக்கும் மற்றவையும் இந்தி பேசாத மாநிலங்களே!

மேற்கு வங்காளம் 4 தொகுதிகளையும், ஒடிசா 3 தொகுதிகளையும், பஞ்சாப் ஒரு தொகுதியையும் இழக்கும். இந்தி பேசும் மாநிலங்களில் உத்தரகாண்டும் இமாசலப் பிரதேசமும் மட்டுமே தலா ஒரு தொகுதியை இழக்கின்றன. மற்றவர்களுக்குக் கூடுதல் தொகுதிகள்தான் கிடைக்கின்றன. உ.பி.க்கு 11, பீகாருக்கு 10, ராஜஸ்தானுக்கு 6, மத்தியப் பிரதேசத்துக்கு 4 என தொகுதிகள் ஆதாயம்.

இந்தத் தொகுதி மறுவரையறை நடவடிக்கையானது இந்தி பேசும் மாநிலங்களுக்கும், இந்தி பேசாத தென்னிந்திய மாநிலங்களுக்கும் இடையிலான முரண்பாட்டை இன்னும் மோசமாக்கிவிடும்.

தற்போது மக்களவையின் 543 தொகுதிகளில் இந்தி மாநிலங்கள் 226 தொகுதிகளைப் பெற்றுள்ளன. தொகுதி மறுவரையறையில் இது 259 ஆக உயரும். இது கிட்டத்தட்ட பெரும்பான்மை எண்ணிக்கை. தற்போது 132 இடங்களுடன் இருக்கும் தென்னிந்திய மாநிலங்கள் இன்னும் எண்ணிக்கை குறைந்து பலவீனமாகும். அவை கிழக்கு மற்றும் மேற்கு இந்திய மாநிலங்களுடன் இணைந்து முயற்சி செய்தாலும், நாடாளுமன்றத்தில் அரசியல் சட்டத் திருத்தங்களை எதிர்த்து ஒன்றுமே செய்ய முடியாத நிலை ஏற்படும்” - என்று எழுதி இருப்பவர் யோகேந்திர யாதவ்.

“நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை நடைமுறைக்கு வந்தால் அது பா.ஜ.க.வின் அதிகாரத்தை மேலோங்கச் செய்யும்” என்று ‘தி இந்து’ நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது. வர்கீஸ் கே.ஜார்ஜ், விக்னேஷ் ராதாகிருஷ்ணன் ஆகிய இருவர் இணைந்து எழுதிய கட்டுரையில், “தொகுதி எல்லை மறுவரையானது, தீபகற்ப மாநிலங்களின் அரசியல் அதிகாரத்தைக் குறைக்கும். மத்திய மாநிலங்களின் அதிகாரத்தை அதிகரிக்கும். பா.ஜ.க. அல்லாத கட்சிகளின் அதிகாரத்தைக் குறைத்து, பா.ஜ.க.வுக்கு வலுசேர்க்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

தொகுதிகளின் எண்ணிக்கை நமக்கு எந்தளவுக்கு குறையும், உ.பி.க்கு எந்தளவுக்கு அதிகமாகும் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லி இருப்பதை இக்கட்டுரையாளர்களும் உறுதி செய்துள்ளார்கள். பா.ஜ.க.வுக்கு செல்வாக்கு மிகுந்த மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்றும் இவர்கள் சொல்லி இருக்கிறார்கள். மாநிலக் கட்சிகளின் வலிமையைக் குறைத்து, தேசிய அரசியலில் தென் மாநில அரசியல் கட்சிகளின் பங்களிப்பைக் குறைத்து, பா.ஜ.க.வின் தேசிய வலிமையை இவை அதிகரிக்கும் என்றும் இக்கட்டுரையாளர்கள் துல்லியமாகக் கணித்துள்ளார்கள். ஒருவிதமான புவியியல் வகைப்பட்ட பிளவை உருவாக்குகிறார்கள் என்றும் அச்சம் தெரிவித்துள்ளது ‘தி இந்து’.

‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ தலையங்கமும் இதனை உறுதி செய்துள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்வது வதந்தி அல்ல, உண்மைதான் என்பதை உறுதிப்படுத்த இவை போதுமானது.**

## கூட்டு நடவடிக்கைக்கு வலுச்சேர்த்துள்ளார் தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி !

# சென்னையில் உறுதி பூண்டது; ஐதராபாத்தில் நிறைவேறியுள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

**சென்னை, மார்ச் 29-**

**தொகுதி மறுசீரமைப்புத் தொடர்பாக சென்னையில் கூடிய கூட்டு நடவடிக்கைக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட வாறு, அதற்கு வலுசேர்க்கும் வகையில் தெலுங்கானா மாநில அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பக்கத்தில் குறிப்பிடும்போது, ‘சென்னையில் உறுதி பூண்டது; ஐதராபாத்தில் நிறைவேறியுள்ளது’ என்று குறிப்பிட்டுள்ளார்.**





ஒன்றிய அரசு தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகளை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், மக்கள் தொகையை கட்டுப்படுத்த திறம்பட செயல்பட்ட மாநிலங்கள் - குறிப்பாக தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் வெகுவாக பாதிப்படைய வாய்ப்பு உள்ளது.

உதாரணமாக தமிழ்நாட்டில் தற்போது 39 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. தொகுதி மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப் படுமேயானால் தமிழ்நாட்டில் மட்டும் 8 தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது. அதே போல கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களும் அதேபோல் வட இந்தியாவில் பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்களும் தொகுதி குறைப்பால் பாதிக்கப் பட வாய்ப்புள்ளது.

அதே சமயம் பா.ஜ.க. ஆளும் பெரும்பாலான மாநிலங்கள் - குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை முறையாக கடைபிடிக்காத காரணத்தால் அதிகரித்து வரும் மக்கள் தொகை காரணமாக கூடுதலான தொகுதிகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

இந்த பாகுபாட்டைக் களைய தொகுதி மறுசீரமைப்பு முறையினை ஒன்றிய அரசு உடனே நடைமுறைப்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி, இதனால் பாதிக்கப்பட உள்ள கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பஞ்சாப், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் முதல்வர்கள், அமைச்சர்கள், கட்சித் தலைவர்கள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு ஆலோசனைக் கூட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 22-ஆம் தேதி சென்னையில் கூட்டி விவாதித்து தீர்மானம் நிறைவேற்றினார்.

நியாயமான மறுசீரமைப்பை வலியுறுத்தி, அடுத்த 25 ஆண்டுகளுக்கு இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாது என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் அம்மாநில சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளார்.

அதற்குப் பாராட்டு தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது சமூக வலைதளப் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**சென்னையில் உறுதிபூண்டது, ஐதராபாத்தில் நிறைவேறியுள்ளது.**

**தெலங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், தெலங்கானா மாநிலச் சட்டமன்றத்தில், “நீதி, சமத்துவம் மற்றும் கூட்டாட்சியியல் உணர்வை உயர்த்திப் பிடிக்கும் வகையிலான நியாயமான மறுசீரமைப்பை வலியுறுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். தமிழ்நாட்டைத் தொடர்ந்து, தெலங்கானா நிறைவேற்றியுள்ள இத்தீர்மானம் நமது ஜனநாயகத்தின் சமநிலையைக் குலைக்கும் எந்த முயற்சியையும் தடுத்து நிறுத்தும் நமது கூட்டு நடவடிக்கைக்கு வலுசேர்ப்பதாக அமைந்துள்ளது.**

**இது வெறும் தொடக்கம் மட்டுமே! நியாயமான மறுசீரமைப்புக்கான கூட்டு நடவடிக்கைக் குழுவின் இரண்டாவது கூட்டம் ஐதராபாத்தில் நடைபெறவுள்ள நிலையில், மேலும் பல மாநிலங்கள் நம்மோடு இணைவார்கள். இந்தியாவின் எதிர்காலத்தை நியாயமற்ற முறையில் மாற்றியமைக்க எவரையும் அனுமதிக்க மாட்டோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## லண்டனில் சிம்பொனி இசையை அரங்கேற்றிய

# இசைஞானி இளையராஜாவுக்கு ஜூன் 2-ல் பாராட்டு விழா!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 29 -**

**ஜூன் 2ம் தேதி இசைஞானி இளையராஜாவுக்கு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்படுகிறது என சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**



சட்டப் பேரவையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் சிந்தனைச் செல்வன் விவாதத்தில் பங்கேற்று பேசும்போது, உலக நாடுகளில் எங்கோ ஒரு மூலையிலே, தமிழ் நாட்டிலே பிறந்த ஒரு இசை மேதை அந்த சிம்பொனியை இசைக்கிறபோது தமிழ்நாட்டிலே அந்த சிம்பொனி இசையை கேட்க முடியாதா? என்கிற வகையில் பேசினார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு பேசுகையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களைப் பற்றி பெருமையோடு எடுத்துச் சொல்லி லண்டனுக்குச் சென்று சிம்பொனி இசையை நடத்தி வந்த பெருமை தமிழகத்திற்குக் கிடைக்காதா? தமிழர்களாக இருக்கக் கூடிய நாம் கேட்க முடியாதா? என்ற ஏக்கம் இருப்பதாக எடுத்துச் சொன்னார்.

அவரை நான் சந்தித்த போது இதே பிரச்சினையை நான் அவரிடத்தில் எடுத்துச் சொல்லி அவரும் நிச்சயமாக, உறுதியாக ஆனால், லண்டனில் இருக்கக் கூடிய 400 பேரையும் இங்கே அழைத்து வருவதென்றால் நினைத்த நேரத்தில் அழைத்து வந்துவிட முடியாது, கால அவகாசம் தேவைப்படுகிறது.

எனவே அதனையெல்லாம் கருத்திலே கொண்டு ஜூன், 2 ஆம் தேதி, அவருடைய பிறந்த நாள், அதுமட்டுமல்ல அவர் திரையுலகத்திற்கு வந்து 50 ஆண்டு காலம் நிறைவடையக் கூடிய அந்த நாளும் அமைகிறது. அதையும் பாராட்டக்கூடிய வகையில் சிம்பொனி நிகழ்ச்சியை லண்டனில் வெற்றிகரமாக நடத்தி முடித்து இருக்கிறார் அதற்கு பாராட்டு விழாவை தமிழக அரசே நடத்த இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்துப் பேசினார்.

## பாரதியார் இல்லம் புதுப்பிப்பு!

சென்னை, மார்ச் 29 –

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் கடம்பூர் ராஜு, பாரதியார் இல்லம் குறித்து பேசினார். அப்போது அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறுக்கிட்டு பேசியதாவது:–

உறுப்பினர் அவர்கள் எட்டயபுரத்திலுள்ள பாரதியார் இல்லம் பழுதடைந்தது பற்றி குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே 3 மாதங்களுக்கு முன்பு அங்கு சென்று ஆய்வு செய்தேன். அப்போது அது மிக மோசமாக இருந்தது.

அது பழைய கட்டடம். 100 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டு, பாரதியார் அவர்கள் பிறந்து, வாழ்ந்த இல்லம். எனவே அதனை புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏறத்தாழ 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தக் கட்டிடம் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

